2010 மே 12]

அவர்கள் தங்குகிற இடங்களுக்குச் சென்று, விசாரணை செய்து, காதல் திருமணம் செய்துகொண்டவர்கள், மதம் மாறித் திருமணம் செய்துகொண்டவர்கள் ஆகியோருக்கு முறையாக உடனே, 60 நாட்களிலே குடும்ப அட்டை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

177—

ஆசிரியர் பயிற்சி

***39002—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்கும் அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் இதுவரை எந்த அரசுக் கலைக் கல்லூரியோ, பி.எட். கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோ கிடையாது. இப்போது மானாமதுரை தொகுதியோடு இளையாங்குடி தொகுதியையும் தொகுதி மறு சீரமைப்பின் காரணமாகச் சேர்த்திருக்கின்றார்கள். அதன் காரணமாக, மானாமதுரை தொகுதியில் 3 ஒன்றியங்கள், 3 பேரூராட்சிகள், மானாமதுரை ஒன்றியத்தில் 39 ஊராட்சிகள், இளையாங்குடி ஒன்றியத்தில் 55 ஊராட்சிகள், திருப்புவனம் ஒன்றியத்தில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

52 ஊராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தத் தொகுதியில் இதுவரை எந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தப் பகுதியில் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்களெல்லாம் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். வேறு எந்தத் தொழிலும் இல்லை. இந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் அனைவரும் ஏழ்மையான சூழ்நிலையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய குழந்தைகளெல்லாம் ஆசிரியர் பயிற்சி படிப்பதற்கு ஏதுவாக, இந்தப் பகுதியிலே ஓர் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மானாமதுரை பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதிலே இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால் அந்தப் பகுதியிலே ஏற்கெனவே, அருகிலே இருக்கக்கூடிய இராமநாதபுரம் மாவட்டத்திலே, மஞ்சூரிலே ஒரு DIET இருக்கிறது. காளையார்கோவிலிலே ஓர் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் இருக்கிறது. இஃதன்னியில், மானாமதுரை தொகுதியிலேயே 2 தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அங்கே 400 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவிர, பொதுவாக NCTE-யிலே ஒரு கொள்கை முடிவு எடுத்து, கடந்த 2009, ஜூலை மாதம் 28-க்குப் பிறகு, சிறுபான்மை நிறுவனங்கள் தவிர்த்து மற்ற நிறுவனங்களுக்கு, புதிய அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி தருவதில்லை என்ற ஒரு முடிவை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கொள்கை முடிவை அவர்கள் தளர்த்தக்கூடிய ஒரு நிலை உருவாகிறபோது, எதிர்காலத்தில் அந்தப் பகுதியிலே ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைக்க வேண்டுமென்கின்ற அவசியம் எழக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும் என்று சொன்னால், அப்போது இது குறித்துப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

2010 மே 12]

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் காளையார்கோவிலிலும், மஞ்சூரிலும் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். மஞ்சூர் என்பது, மானாமதுரை தொகுதியிலிருந்து சென்றால் கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அதேபோல, மானாமதுரையிலிருந்து காளையார்கோவில் 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், இங்கேயிருந்து செல்வதற்குப் போக்குவரத்தும் ஓர் இடையூறாக இருக்கின்றது. ஆனால், மானாமதுரை தொகுதியில் பேருந்துப் போக்குவரத்தும், இரயில் போக்குவரத்தும் அதிகமாக இருக்கின்றது. பொதுவாக அரசு நிலங்களும் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கட்டுவதற்கு அதிகமாக எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. அதைப்போல, அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், அரசு உதவிபெறும் பள்ளிகளும் அதிகமான கட்டணத்தை வசூல் செய்துகொண்டிருக்கின்றன. அரசு எவ்வளவுதான் கட்டணம் நிர்ணயம் செய்தாலும்கூட, அவர்கள் அந்த மாணவ, மாணவியர்களைச் சேர்க்கின்றபோது, அரசு நிர்ணயித்த கட்டணம் அதற்கு மட்டும்தான் பொருந்தும் என்று சொல்லி. . .

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Supplementary question என்பது short-ஆக இருக்க வேண்டும். நீங்கள் ஏன் debate-ல் பேசுகிற மாதிரி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ம. குணசேகரன்: அதற்குள்ளதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். வேறு ஒரு subject-க்கு மாறிப் போகவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், தனியார் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் வைத்திருக்கின்றவர்கள் மாணவ, மாணவியர்களைச் சேர்க்கின்ற நேரத்தில், அரசு நிர்ணயித்த கட்டணத்தைத்தான் நாங்கள் வசூல் செய்தோம் என்று சொல்கிறார்கள். ஆனால் மாணவர்களைச் சேர்த்த பிறகு, அதிகமாகக் கட்டணங்களை மறைமுகமாக வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்து, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் நடைபெறாமல் இருக்க, அனைத்து வசதிகளையும் கொண்ட மானாமதுரை தொகுதியில் இந்த நிதியாண்டிலேயே

அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் துவக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு NCTE-னுடைய approval நமக்குக் கண்டிப்பாகத் தேவை. ஏற்கெனவே, தருமபுரி மாவட்டத்திலேகூட ஒரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை அமைத்து, அங்கே விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகும்கூட இன்னும் NCTE-லிருந்து அந்த approval வரவில்லை. அதன் காரணமாக அங்கே மாணவர்களைச் சேர்க்க முடியவில்லை.

இன்னொன்று, ஒற்றைச் சாளர முறையிலே இப்போது மாணவர்கள் அனுமதிக்கப்படக்கூடிய காரணத்தால், மானாமதுரை தொகுதியிலேயேகூட அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் வந்தால், அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்களைத்தான் அங்கு சேர்க்க முடியும் என்பதில்லை. மற்றவர்கள் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால், அவர்களும் அங்கே அனுமதி பெறக்கூடிய வாய்ப்பு வரும்.

இன்னொன்று, தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே அதிகமாகக் கட்டணம் வசூலிப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். எந்த நிறுவனங்கள் அப்படி வாங்குகின்றன என்கின்ற தகவலை உறுப்பினர் அவர்கள் எனக்குத் தனியாகத் தெரிவிப்பார் என்று சொன்னால், அதன்மீது உரிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கி பல ஆண்டுகளாகியும், இதுவரையில் பணிமுன் பயிற்சி அளிக்கப்படாமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. அரசு அனுமதி பெற்று அதை உடனடியாகத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா?

2010 மே 12]

குறிப்பாக, கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற அந்தப் பகுதியில், அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றால்தான் கிராமப் பகுதியிலே சென்று பணியாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கும். ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களில் நியமிக்கப்படுகிறபோது, அங்கே போய்ப் பணியாற்றுவதற்கு மறுத்து, பல பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருப்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அந்த அலுவலகம் கட்டுவதற்கான இடத்தை மாவட்டத் தலைநகரிலே தந்திருக்கிறோம். எனவே, அதைச் செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புவதோடு, தருமபுரி மாவட்டத்தில் அரூர் பகுதி, தருமபுரியிலிருந்து 100 கிலோ மீட்டர் வரையிலே சென்றுதான் மாவட்டக் கல்வி அலுவலர்கள் பள்ளிகளை ஆய்வு செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. பள்ளிகளை அடிக்கடி மேலதிகாரிகள் ஆய்வு செய்தால்தான் பள்ளியினுடைய தரமும் உயரும். ஆசிரியரினுடைய வருகையும் சிறப்பாக இருக்கும். எனவே அந்த அடிப்படையில், வருவாய்க் கோட்ட அலுவலகமாக இருக்கிற அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கல்வி மாவட்டத்தை உருவாக்கி, அதற்கும் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நடப்பாண்டிலேயே அதற்கான நடவடிக்கையை எடுத்து, ஒரு கல்வி அலுவலரை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு கேள்வியிலேயே மூன்று கேள்விகளைக் கேட்டிருக்கிறார். முதல் கேள்விக்கு, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல, தருமபுரியிலே அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு NCTE-னுடைய approval இன்னும் வரவில்லை. அவர்கள் கடந்த வருடம் ஜூலை மாதம் 28 ஆம் தேதிக்குப் பிறகு வந்திருக்கக்கூடிய நிறுவனங்கள், சிறுபான்மை நிறுவனங்களாக இருந்தால் மட்டும்தான் அனுமதி கொடுப்போம் என்கிற கொள்கை முடிவு எடுத்து, நாம் கொடுத்திருந்த விண்ணப்பத்தை அவர்கள் நிராகரித்திருக்கிறார்கள். அவர்கள் நிராகரித்ததற்குப் பிறகு, இது ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

என்கின்ற காரணத்தால், விதிவிலக்குப் பெற வேண்டுமென்று மத்திய அரசிடமே நாம் அதற்கு appeal செய்திருக்கிறோம்; ஒன்று. இரண்டாவது, அவர் சொன்னதைப்போல, இப்போது District seniority இல்லை. State seniority-ல்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்ற காரணத்தால், பல மாவட்டங்களில், குறிப்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், இந்தத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தினுடைய சார்பிலே வழங்கப்பட்டிருக்கக்கூடிய தீர்ப்பு. எனவே, அரசு உச்ச நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் State seniority-ல் நாம் இன்றைக்கு கொடுத்திருக்கிறோம் என்பதை நான் கவனப்படுத்த விரும்புகின்றேன்.

அரூரிலே, மாவட்டக் கல்வி அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி பிரிந்த பிறகு, அரூர் தொகுதியில் இருக்கக்கூடிய பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அது ஒரு வருவாய்க் கோட்டமாக இருந்தாலும், பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தால், தற்போதைய சூழ்நிலையில் அந்தக் கல்வி மாவட்டம் அமைய வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் பள்ளிகளினுடைய எண்ணிக்கை கூடுகிறபட்சத்தில் இது குறித்து அரசு தனியே பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கடந்த ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு The Right to Education என்கிற சட்டத்தை அமல்படுத்தி வருகிறது. அதை முழுமையாக அமல்படுத்துகின்ற காலக்கட்டத்தில், நாடு முழுவதும் 8 இலட்சம் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்குமென்று புள்ளிவிவரங்களில் கணக்கிட்டிருக்கிறார்கள். 8 இலட்சம் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது, ஒரு மிகப் பெரிய, நம்முடைய கல்வி என்கிற அமைப்புக்கே விடப்பட்ட சவாலாக நான் கருதுகின்றேன். அந்த ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு அரசு என்ன முயற்சிகளை எடுக்க உத்தேசித்திருக்கிறது என்று அறிய வருகிற அதே வேளையிலே, சுதந்திரம் அடைவதற்கு முன்னால், 5 ஆம்

2010 மே 12]

வகுப்பு வரையில் படித்தவர்களை ஆசிரியர்களாக நியமித்தார்கள். அதற்குப் பிறகு, 8-வது படித்தவர்களை ஆசிரியர்களாக நியமித்தோம். இப்போது பட்டயப் படிப்பு, அதற்குப் பிறகு பட்டப் படிப்புப் படித்தவர்களை ஆசிரியர்களாக நாம் நியமித்து வருகிறோம். இப்போது கல்வியினுடைய தரம், ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்தது. எனவே, கல்வியின் தரத்தை உயர்த்துகிற வகையிலே இனிமேல் பட்டப் படிப்பு, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களைத்தான் எல்லாப் பள்ளிகளும் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும், என்கிற முடிவை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, 756 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 1 லட்சத்து 3 ஆயிரம் ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள் வெளியே வருகிறார்கள். ஏற்கெனவே 4, 5 ஆண்டுகளாக நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், இதே எண்ணிக்கையிலானவர்கள் பட்டயம் பெற்று வெளியே வந்து, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டியவர்கள் 8 இலட்சம் ஆசிரியப் பெருமக்கள் என்று நாடு முழுவதும் எடுத்துக்கொண்டாலும்கூட நமக்கு வரக்கூடிய ஆசிரியர்களினுடைய எண்ணிக்கையை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டாலும்கூட, இப்போது ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் அதிக எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் நாம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, தமிழக அரசைப் பொறுத்தமட்டில், போதுமான அளவுக்கும் அதிகமான அளவிலேயே ஆசிரியர் பட்டயப் படிப்பு முடித்தவர்கள் நம்மிடத்திலே இருப்பார்கள். இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதுபோல, கல்வியினுடைய தரம் ஆசிரியர்களினுடைய தரத்தைப் பொறுத்து அமையக்கூடிய ஒரே

காரணத்தால்தான், இப்போது நடுநிலைப் பள்ளிகளில்கூட B.Ed. பட்டதாரிகள்தான் நியமிக்கப்படுகிறார்கள். முன்பு நடுநிலைப் பள்ளிகளில்கூட இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுகொண்டிருந்த ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது நடுநிலைப் பள்ளிகள், 6, 7, 8 ஆம் வகுப்புகளில்கூட B.Ed. படித்தவர்கள்தான் அங்கேயும் வகுப்புகளை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசாணை இருக்கிறது. அந்த வகையில், தொடர்ச்சியாக B.Ed. படித்தவர்கள்தான் அங்கே நியமிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வட மாநிலங்களை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், para teachers என்கின்ற வகையிலே, முறையான பட்டயப் படிப்போ அல்லது பட்டப் படிப்போ படிக்காத ஆசிரியர்கள்தான் வட மாநிலங்களிலே பெருமளவில் இருக்கிறார்கள். முறையான பட்டப் படிப்பும், அதேபோல பட்டயப் படிப்பும் படித்த ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய ஒரு மாநிலம் தமிழகம் என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைப் பற்றிக் கேள்வி எழுப்பினார். தமிழகத்திலேயே முதன்முதலாக ஆசிரியர்களுக்கென்று ஒரு பல்கலைக்கழகத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்திலே இந்தக் குறைபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை. மேலும், 4 ஆண்டு கால ஆசிரியர் பயிற்சிக்கான வகுப்பையும் துவக்கலாம் என்ற ஆய்வு அந்தப் பல்கலைக்கழகத்தின்மூலமாக செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. உதாரணமாக, இன்று உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு Science Teacher இருந்தால். அவர் B.Sc., Zoology, Chemistry, Botany, இதில் ஏதேனும் ஒன்றைப் படித்துவிட்டு, அங்கே போய் பொது அறிவியல் பாடத்தை நடத்துகிறார். அவ்வாறு இல்லாமல், அவர் Higher Secondary முடித்தவுடன் 4 ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சிக்கென்றே உரிய பாடத் திட்டங்களைப் படித்துவிட்டு இதுபோல் படிப்பதற்கான ஏற்பாடுகளை சில

2010 மே 12]

மாநிலங்களில் செய்திருப்பதைப்பதைப்போல செய்யலாமா என்றும் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். வருங்காலங்களில் 4 ஆண்டு கால B.Ed. Course, அதே நேரத்தில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற Degree மற்றும் ஒரு B.Ed. Course, அதையும் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில் வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

178—

சாலை வசதி

***113726—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் அருகில் கட்டைக்காடு, பிலக்காடு, தாசன்காடு, புதுகாடு பகுதிகளுக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்:*

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு சரணாலயம் பகுதியில் கட்டைக்காடு, பிலக்காடு, தாசன்காடு, புதுகாடு பகுதிகளுக்கு சாலை வசதி செய்ய அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், அவையில் இல்லை. அவருக்கு மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.*